# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.06.2025 | தீபம் 36


# நூற்றாண்டு பழமை வாய்ந்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு

# விரைவில் நடக்கவுள்ளது மூடுவிழா?

## உதயன் பத்திரிகையில் செய்தி

நூற்றாண்டு பழமை வாய்ந்த யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை உள்ளிட்ட நாட்டில் இருக்கும் ஆசிரிய கலாசாலைகள் அனைத்தையும் தேசிய கல்வியியல் கல்லூரிகளுடன் இணைத்து பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதமரும் கல்வி, உயர்கல்வி அமைச்சரு மான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை வாய் மொழிமூல வினாவுக்கு விடையளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாடளாவிய ரீதியில் எட்டு ஆசிரிய பயிற்சி கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் கிராகம ஆசிரியர் பயிற்சி கல்லூரி பேராதனை தேசிய கல்வியியல் கல்லூரி யுடன் இணைக்கப்பட்டு அங்கு 150 பேருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஏனைய (கோப்பாய் உள்ளிட்ட) ஐந்து ஆசிரியர் கலாசாலை-களை தேசிய கல்வியில் கல்லூரியுடன் இணைப் பதற்கு எண்ணியுள்ளோம். ஆசிரியர் பயிற்சி மூலம் அவர்களது திறமையை அபிவிருத்தி செய்வ தற்கு இந்த வருடத்தில் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளுடன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் இணைத்து பயிற்சிகளை வழங்குவதன் மூலம் 2 ஆயிரத்து 175 பயிற்சியாளர் களை இணைத்து பயிற்சி களை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். சம்பந் தப்பட்ட பயிற்சி நிறு வனங்களின் விடுதி வசதிகளை அதிகரித்து அவர்க ளுக்கு தேவையான வசதிகளை வழங்கும் வகையில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். ஆசிரியர் கலாசாலைகள் நாட்டில் உள்ள அரச, தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களில் உள்ள பட்டாதாரிகள் அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்க ளுக்குப் பயிற்சியை வழங்குகின்றன.


நூற்றாண்டுப் பழமை வாய்ந்த

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு

விரைவில் நடக்கவுள்ளது மூடுவிழா?

யாழ்ப்பாணம், மே 26

நூற்றாண்டுப் பழமைவாய்ந்த யாழ்ப் பாணம், கோப்பாய் ஆசிரிய கலா சாலை உள்ளிட்ட நாட்டில் இருக் கும் ஆசிரிய கலாசாலைகள் அனைத்தையும் தேசிய கல்வியியல் கல்லூரி 09

இந்த நிலையில் கலாசாலை முறைமை இல்லாமல் செய்யப்பட்டு கல்வியியல் கல்லூரிகளுக்குள் உள் வாங்கப்படுகின்றமை தொடர்பாக கல்வியாளர்களி டையே பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. யாழ்ப்பாணத்தின் நூற்றாண்டுகால அடையாள மாகவும், கல்விப்பாரம்பரியத்தின் குறிகாட்டியாக வும் விளங்கும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரைவில் மூடப்படலாம் என்ற செய்தி கல்விப்புல வட்டாரங்களிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யிருக்கின்றது.

**நன்றி**
**உதயன் பத்திரிகை**
**26.05.2025**

## கலாதீபக் குழுமம்


**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.



**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## இருபாலை திருவருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபனம்

இருபாலை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபன பத்திரிகை கையளிப்பு

மகோற்சவ விஞ்ஞாபனத்தை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் 02.05.2025 வெள்ளிக்கிழமை காலை கலாசாலை அதிபர் ச.லலீசன், பிரதி அதிபர் க.செந்தில்குமரன் இந்து மன்ற காப்பாளர் கு.பாலசண்முகன் ஆகியோரிடம் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்



தென் கோவை (இருபாலை) கற்பகப் பிள்ளையார் கோவில் பெருந்திருவிழாவின் மூன்றாவது நாள் பகல் திருவிழா 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தின் உபயமாக நடைபெற்றது. சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் மகோற்சவகுருவாக கிரியைகளை மேற்கொண்டார்.





# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

**ஆசிரிய வாண்மைத்துவம் உணரப்படாதது ஏன்?**

வாண்மைத்துவ சேவைகளை உற்பத்தி செய்தும் அதனை வளம்படுத்தியும் நிற்கின்ற ஆசிரிய சேவையானது வாண்மைத்துவமின்றிக் காணப் படுவதனால் பல்வேறு பிரதிகூலங்கள் உருவாகின்றன.

இந்நிலையில், கல்வி முறைமைகளையும் அதனை உறுதிப்படுத்துகின்றதான நடைமுறைசார் கொள்கை வகுப்பினையும் பயில் வழிப்படுத்தல்கள் மூலம் முன்வைக்கின்ற வாண்மைப் பலம் பொருந்திய எதிர்கால ஆசிரியப் படையணி ஒன்றை உருவாக்குவதே 21ம் நூற்றாண்டுக் கல்வித் தேவையாகும்.

சர்வதேச சமூகப் பொருளாதார, அரசியல், அபிவிருத்தி உற்பத்தி முறைகளுக்கு அமைவாக அதன் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய வகையிலும் எமது தேசத்தின் தேசிய இலக்குகளை அடையக் கூடிய வகையிலும் நாட்டுக்குப் பொருத்தமுடைய சமூகக் பொருளாதார பாரம் பரிய கலை பண்பாட்டு அம்சங்களைப் பேணுகின்றதும் வளங்குகின்றதுமான நற்பிரஜைகளை உருவாக்கம் செய்கின்ற முறைமையையும் உள்ளடக்கியதாக ஆசிரிய வாண்மைத்துவக் கல்வி முன் மொழியப்படவேண்டும்.


அந்தவகையில் இலங்கையில் கல்வி முன்னெடுப்புக்களை செயற்படுத்தி வருகின்ற ஆசிரிய கலாசாலைகள் தமது புலமைசார் புலமையினை முழுமையாகப் பயன்படுத்தி ஆசிரியர்களுக்கான இற்றைப்படுத்தல் செயற்பாடுகளை காலத்திற்குக் காலம் வழங்குகின்ற நிறுவனங்களாக மாற்றமடைய வேண்டும் என்பது கல்விச் சமூகத்தின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

## பார்வைக் குறைபாடுடைய மாணவரை கண்டறிவது எப்படி?

### கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கு செயன்முறைப் பயிற்சி

மாணவரின் பார்வை குறைபாடு குறித்து ஆசிரியர் ஒருவர் எவ்வாறு கண்டறிவது என்பது பற்றிய செயல்முறை நிகழ்வு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 16.05.2025 வெள்ளிக்கிழமை பிரதி முதல்வர் கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் யாழ் விசன் கெயர் நிறுவனத்தைச் சேர்ந்த வளவாளர்கள் பார்வைக் குறைபாட்டை கண்டறிவது பற்றிய பயிற்சிகளை ஆசிரிய மாணவர்-களுக்கு வழங்கினர்.









# News in Brief - Month of May

## 08.05.2025

### Assembly

The assembly was held at the college on Thursday, at 8.30 am under the chairmanship of the college Principal, S. Laleesan.

Ilakkiya Kalaimaṇi Sivapatham Ganeshkumar (London) participated as the guest speaker at the event.

This gathering, which was initiated by first-year Teacher Students, was moderated by Thangarasa Darshan, a Teacher Student in the Special Education Course.

Primary Course Teacher Student Innok Dines Jayarani - delivered a speech on The Importance of May Day.

A special video related to May Day was produced and displayed by Primary Course Teacher Student - Pol Pratheeskumar Andrenet Marsha.

followed by an introductory speech for the guest, delivered by E.Sendhurselvan, a Teacher Student of Science Course.

Ilakkiya kalaimaṇi Ganeshkumar handed over copies of his published books to Vice Principal Sathya Ranjith for the college library.

## 11.05.2025

The third day festival of the Karpaka Pillayar Temple was held on Sunday, courtesy of the Kopay Teachers' College Society.

## 15.05.2025

### Assembly

### Seminar on Eye Health at the College

A seminar on eye health at the College was held under the chairmanship of the Principal S.Laleesan on Thursday, at 8.30 am.

Jaffna Teaching Hospital Ophthalmologist Dr. M. Malaravan participated as a Guest Speaker and delivered a speech.

The event, organized by the English Course Teacher Students, was moderated by Dinesh.Kousia. And David. Lijani - English course teacher student delivered the Mother's Day special address.

English course Teacher Student Dharmini Sampathkumar gave an introductory speech on Dr. M. Malaravan.

Dr. M. Malaravan was honored by the College Management Team.

## 16.05.2025

### How to Identify a Visually Impaired Student? Practical Training for College Teacher Students

A practical event on how a teacher can identify a student's visual impairment was held at Kopay Teachers' College on Friday, under the chairmanship of Deputy Principal Kanapathipillai Senthilkumaran.

In this event, resources from Jaffna Vision Care provided training to Teacher Students on identifying visual impairment.

### Jaffna News Papers - News about Kopay Teachers' College

Teachers colleges will be amalgamated with National Colleges of Education. The Premier Hon. Harini Amarasuriya told at the Parliament on 22.05.2025 at the question hour.

This news came in Uthayan on 26.05.2025 and an Editorial was written by Valampuri Newspaper on 25.05.2025

# புதன் வாராந்த ஒன்றுகூடல் இலக்கிய கலைமணி சிவபாதம் கணேஷ்குமார்(லண்டன்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கலாசாலையில் மாணவர் ஒன்றுகூடல் 08.05.2025 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக இலக்கிய கலை மணி சிவபாதம் கணேஷ்குமார் (லண்டன்) கலந்துகொண்டார்.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் முன்னெடுப்பில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ் வை விசேடகல்விநெறி ஆசிரிய மாணவன் தங்கராசா தர்சன் நெறிப்படுத்தினார்.

ஆரம்பகல்வி ஆசிரிய மாணவி இன்னோக் டினேஸ் ஜெயராணி - மே தினத்தின் சிறப்பு என்ற பொருளி ல் ஆசிரிய மாணவர் உரையை ஆற்றினார்.

மே தினம் தொடர்பான சிறப்புக் காணொளி ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி - போல் பிரதீஸ்குமார் அன்ரனெற் மார்ஷலாவினால் தயா ரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து அதிதிக்கான அறிமுக உரை இடம்பெற்றது. இதனை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர் இ.செந்தூர்செல்வன் வழங்கினார்.

கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் அதிதி கௌரவிக்கப்பட்டார்.

இலக்கிய கலைமணி கணேஷ்குமார் தான் வெளியிட்ட நூல் பிரதிகளை கலாசாலை நூலகத் திற்காக உப அதிபர் சத்தியா ரஞ்சித் இடம் கையளித்தார்











# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் மு.மலரவன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்


கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கண் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் 15.05.2025 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர்.மு.மலரவன் வளவாளராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வை தினேஷ்.கௌசியா நெறிப்படுத்தினார். ஆசிரிய மாணவி டேவிட்.லிஜானி அன்னையர் தின சிறப்புரையை ஆற்றினார்.

ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் டாக்டர். மு.மலரவன் குறித்த அறிமுக உரையை வழங்கினார்.

கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் டாக்டர்.மு.மலரவன் கௌரவிக்கப்பட்டார்.














# கலாசாலை பற்றி வலம்புரிப் பத்திரிகை 25.05.2025 ~ ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர் தலையங்கம்

நாடு முழுமையிலும் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளைத் தேசிய கல்வியியல் கல்லூரிகளுடன் இணைக்கின்ற வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதமரும் கல்வி அமைச்சருமாகிய ஹரிணி அமர சூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவரின் இந்த அறிவிப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு மூடுவிழா நடக்கப் போவதை உறுதி செய்கிறது.

ஒரு காலத்தில் இந்த நாட்டின் கல்விப் புலம் உன்னதமாக விளங்குவதற்கு மூலகாரணமாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளே விளங்கின.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் வழங்கிய பயிற்சிகள் சான்றாண்மைமிக்க ஆசிரியர்களை இந்த நாட்டுக்குத் தந்தன.

அதிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் பல்கலைக்கழகங்களுக்கு நிகரான பணியை ஆற்றின என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் தரமான ஆசிரியர்களை உருவாக்கிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் முற்றுப் பெறுவதென்பது துரதிர்ஷ்டமானது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூறியாக வேண்டும். அதாவது, நாட்டிலுள்ள எல்லா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை பயிற்சிக் கலாசாலைகளையும் மூடுதல் என்றில்லாமல், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை இணைத்தல் என்ற செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதனூடு ஒரு சில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையாவது தக்க வைக்க வேண்டும் என்பது கல்வியாளர்களின் நிலைப்பாடாக உள்ளது.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பது நூறு ஆண்டுகளைக் கடந்து இன்றுவரை ஆசிரியர்களை உருவாக்குகின்ற பணியை ஆற்றி வருகிறது.

1923 ஆம் ஆண்டு சேர் பொன். இராமநாதன் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இந்த நாட்டின் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளம். எனவே அதனைப் பாதுகாப்பது இந்த நாட்டினதும் கல்விச் சமூகத்தினதும் தலையாய கடமை.

அதிலும் குறிப்பாக இது விடயத்தில் நம் தமிழ் அரசியல் தரப்புகள் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

நூறு ஆண்டுகளைக் கடந்தும் ஆசிரியர் களுக்குப் பயிற்சியை வழங்கிக் கொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைப் பாதுகாப்பதென்பது நம் கல்வியைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையாகும்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இந்த நாட்டின் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளம்.

எனவே அதனைப் பாதுகாப்பது இந்த நாட்டினதும் கல்விச் சமூகத்தினதும் தலையாய கடமை.

அதிலும் குறிப்பாக இது விடயத்தில் நம் தமிழ் அரசியல் தரப்புகள் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

நூறு ஆண்டுகளைக் கடந்தும் ஆசிரியர் களுக்குப் பயிற்சியை வழங்கிக் கொண்டிருக் கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைப் பாதுகாப்ப தென்பது நம் கல்வியைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையாகும்.

எனவே கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைத் தொடர்ந்து இயங்க வைப்பதில் இந்த நாட்டின் பிரதமர் கருசனை காட்ட வேண்டும் என்பதுடன் இது தொடர்பில் நம் அரசியல் தரப்பினர் உடனடியாகப் பிரதமரைச் சந்தித்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலையைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

**நன்றி - வலம்புரிப் பத்திரிகை**

# யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய விவகாரம்

## ~ கலாசாலை தமது சுயாதீனத்தன்மையுடன் தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதிக்கவேண்டும் எனத் தீர்மானம் ~

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் 30.05.2025 காலை 9.45 மணிக்கு இடம்பெற்றபோது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை கல்வியியல் கல்லூரியுடன் இணைப்பது தொடர்பான விவகாரம் எடுத்துக் கொள் ளப்பட்டது

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் கௌரவ ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் அவர்களால் முன்மொழியப்பட்ட இவ்விகா ரத்தில் கல்வியல் கல்லூரியுடன் இணைத்து பயிற்சி வழங்கும் போது ஆசிரியர் கலாசாலைகளின் சுயா தீனத்தன்மை பேணப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்

மேலும் கடந்த 22.05.2025 அன்று கௌரவ பிரதம மந்திரியிடம் ஆசிரியர் கலாசாலைகள் தொடர்பான வினாவை தானே தொடுத்ததாக சுட்டிக்காட்டிய அவர் - நூற்றாண்டு பழமை வாய்ந்த இக் கலா சாலை சேவையின் பின்னான (in-service) பயிற்சி யை வழங்குகின்ற நிறுவனம் எனவும் கல்வியியல் கல்லூரிகள் சேவை முன் பயிற்சியை (pre-service) வழங்குகின்ற நிறுவனம் எனவும் தெரிவித்தார்.

அதிகளவான ஆசிரியர்களை கல்வியில் கல்லூரிகள் ஊடாக பயிற்றுவதற்கான தேவை எழுந்துள்ள நிலையில் கலாசாலைகளை மூடாமல் அவற்றின் சுயாதீனத் தன்மைகளை பேணியவாறு இப் பயிற்சி களை வழங்கலாம் எனவும் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் ஸ்ரீதரனும் இக்கருத்தை ஆதரித்து பேசினார்.

இக்கூட்டத்தில் கலாசாலையின் சார்பில் பிரதி அதி பர் கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் கலந்து கொண்டார்.

இதேவேளை கலாசாலை அதிபர் இசுருபாய கல்வி அமைச்சில் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் - கோப்பாய் ஆசிரியர் கலாசா லையில் (வட மாகாணம் மற்றும் திருகோண மலை ஆகிய இடங்களில் இருந்து தெரிவாகிய 92 தமிழ் மொழி மூல ஆங்கில மொழி மூல ஆசிரிய கல்வியாளர்களுக்கான) இலங்கை ஆசிரிய கல்வியாளர்சேவை திசை முகப்படுத்தல் பயிற்சியை வழங்குவது தொடர்பாக நடத்திய கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது







